# அய்யகோ... சாய்ந்தனையோ ஆலமரமே!



திராவிடச் சித்தாந்தத்தின் ஞானக் கருவூலமொன்று கருப்புத் திரைக்குள் முகமொளித்துக் கொண்டதே!

காலமெல்லாம் முரசொலிக்காய் ஓயாது உழைத்த அந்தப் பேரன்புப் பெட்டகம் இன்று ஈமக் கப்பலுக்குள் ஏறிவிட்டதே!

முத்தமிழறிஞரின் முரசொலிக்கு மூன்றாம் கண்ணாய் நின்ற அந்தப் பேரறிவு, சில்லிட்டு இருப்பதாய் சேதி வந்ததே ! ஐயகோ, எளியவன் மூளை எழுத மறுத்து மருகி மருகி மருண்டு மருண்டு செத்துச் செத்துப் பிழைக்கிறதே!

எழுது. எழுது என்று என்னை ஊக்கப்படுத்திய, தாயுள்ளம் சுமந்த அந்தப் பேரன்புக் குரல் என் செவிப்பறைகளெங்கும் முரசொலித்து மோதி மோதி விழிகளை கடலாக்குகிறதே! விரல்கள்நடுங்குகின்றதே! வேறேதும் பிடிக்கலையே!

வரி வரியாய் படித்து அதிகாலையிலும் அழைத்து வாழ்த்தும் அந்தத் தாயுள்ளம், இன்று சொல்லாமல் கொள்ளாமல் சுவனம் புகுந்து விட்டதே!

முன்தினம் கூட முரசொலியில் எழுதினாரே? ஏனிந்த அவசரமோ? எங்கிருந்து அழைப்போ ? முத்தமிழறிஞரின் முகம் பார்க்கும் பரபரப்போ?

சட்டம் படித்தவரே! சட்டமன்றக் கூண்டிலேற்றிய போதும் விரைத்து நின்ற திராவிடத் தீரரே ! எங்கள் மிக மூத்த வழிகாட்டியே ! பத்திரிக்கையுலகத்தின் வீட்டுமரே... பாசப் பெருந்தகையே.. அமையும் ஐயா, அமையும்! அமையும்!

தங்களை, தங்கள் அயராத அர்ப்பணிப்பை 'முரசொலி செல்வம்' என்னுமந்த பெருமரியாதைக்குரிய திருப்பெயரை இந்த திராவிடத் திருநாடு என்றென்றும் மறவாதிருக்கும்! தோன்றி வந்த ஆரூர் சோதிக்குள் அமையும் ஐயா, அமையும்! அமையும்!

தமிழாய்ந்த பெருமகனே, எங்களைப் போன்ற இளைஞர்களின் எழுத்தில் என்றும் நீங்கள் முரசொலித்து வாழ்வீர்கள் என்பது திண்ணம். பாரம் உமக்கில்லை. பால்வீதி கடந்து அமையும் ஐயா, அமையும்! அமையும்!

ஆன்மச் சிறகின் காலகாலமான மிதத்தலில், மரணம் என்பது அடுத்தகட்ட பயணம் மட்டுமே எனத் தேற்றிக் கொள்வதைத் தவிர எமக்கிங்கே வேறு வழியில்லை.

தாங்கள் எங்கள் மேல் பொழிந்த பேரன்பை இறுகப்பற்றியபடி நன்றியோடு இருகரம் கூப்பி நெஞ்சார வணங்குகிறோம்!

பேராளரே அமையும்!

தீதொன்று அணுகாத பேரமைதி அதற்குள், திராவிடத் திருவாய் சென்று அமையும் ஐயா.. அமையும் ! அமையும் !!

**ஸ்ரீராம் சர்மா**



# குரூப்-பி பணிக்கு வயது தளர்வு அளித்திடுக!

## புதுச்சேரி துணை நிலை ஆளுநருக்கு இரா.சிவா எம்.எல்.ஏ. கடிதம்!

புதுச்சேரி, அக். 12 - புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எம்.எல்.ஏ. துணை நிலை ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:

புதுச்சேரி மாநிலத்தில் கல்வி வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கத்தின் காரணமாக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்பு என்பது மிக சொர்ப்பமாக உள்ளது. இதன் காரணமாக படித்த பட்டதாரிகள் வயிற்றுப் பிழைப்பிற்காக அண்டை மாநிலங்களுக்கு வேலை தேடி ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசுத் துறைகளில் வேலைவாய்ப்புகள் இருந்தும் முறையாக பணியாளர் தேர்வு வாரியம் இல்லாததால் குரூப்-பி மற்றும் சி பணியிடங்களுக்கு காலத்தோடு பணியாளர்களை தேர்வு செய்ய முடியாத அவலம் தொடர்கிறது.

குரூப்-பி பணியிடங்களான பொதுப்பணித்துறையின் இளநிலைப் பொறியாளர் (JE) மற்றும் ஓவர்சீஸ், கல்வித் துறையின் பட்டதாரி ஆசிரியர் மற்றும் விரிவுரையாளர், நிர்வாகத்துறையில் உதவியாளர் (ASSISTANT) போன்ற பதவிகளுக்கு இவ்வாண்டு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பத்தாண்டுகளுக்கு பிறகு மிகவும் தாமதமாக வந்துள்ளது. இவை காலத்தோடு அறிவிப்பு செய்திருந்தால் பல பட்டதாரிகள் தங்கள் வயது வரம்பை எட்டும் முன்பாக அந்தப் போட்டித் தேர்வுகளில் பங்கேற்றிருக்க முடியும். குறிப்பாக உதவியாளர் (ASSISTANT) பதவி இவ்வாண்டு தான் முதல் முதலாக நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அறிவிக்கப்பட்டது. இதற்கு நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் ஓரிரு வயது அதிகமான காரணத்தால் விண்ணப்பித்து போட்டித் தேர்வில் பங்கேற்க இயலாத நிலை உள்ளது வருந்தத்தக்கதாகும். ஆண்டுக்காண்டு காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடாமல் பல ஆண்டுகள் தாமதித்தும், கொரோனா தொற்று காரணமாகவும் அவர்களுக்கான பொதுவான வயது வரம்பை தளர்த்தி சில நூற்றுக்கணக்கான நமது பட்டதாரிகளை போட்டித் தேர்வில் பங்கேற்க வைப்பது அவசியமாகிறது.

வயது தளர்வு என்பது எல்லா நிலையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. சட்டமன்றத்தில் நாங்கள் பேசியும், மாண்புமிகு முதல்வர் அவர்களை சந்தித்து வலியுறுத்தியும் சமீபத்தில் காவல் பணியிடங்களுக்கு இரண்டாண்டு தளர்வு கொடுத்து தேர்வு நடைபெற்றது.

இதுமட்டுமின்றி நாட்டின் பல மாநிலங்களிலும் பல துறைகளிலும் இந்த வயது தளர்வு நடந்துள்ளது. அந்தமான் நிக்கோபர் தீவுகள் யூனியன் பிரதேசத்தில் கொரோனா தொற்று காரணமாக குரூப்-பி மற்றும் சி பதவிகளுக்கு இரண்டு ஆண்டுகள் வயது வரம்பு தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதே தொற்றை காரணம் காட்டி லடாக் யூனியன் பிரதேசத்திலும் குரூப்-பி உள்ளிட்ட பதவிகளுக்கு தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதுபோல் இரயில்வே வாரியம் நடத்தப்போவதாக அறிவித்துள்ள பணியிடத் தேர்வில் குரூப்-பி பதவிகளுக்கு 3 ஆண்டுகள் வயது தளர்வு அளித்துள்ளது. மேலும், புதுச்சேரி யில் அரசு பதிவிதழ் பெறாத குரூப்-பி பணியிடங்கள் ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைக்கு முன் குரூப்-சி பணியிடங்களாக இருந்தன என்பதும், அதனை முன்னிட்டு குரூப்-பி பணியிடங்களுக்கான நேரடி நியமனத்தில் MBC, EBC, BCM மற்றும் BT ஆகிய பிரிவினருக்கு புதுச்சேரி அரசு சமூக நலத்துறையின் 15.03.2023 நாளிட்ட அரசாணை எண்-5/SWS/2022-23-ன் படி இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

ஆகவே, புதுச்சேரி யூனியன் பிரதேச நிர்வாக அதிகாரியான தங்களுக்கு மட்டுமே உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்சொன்ன பதவிகளுக்கு அளிக்கப்பட்ட தளர்வு அடிப்படையிலும், கொரோனா பாதிப்பை முன்வைத்தும், பல ஆண்டுகள் பணி அறிவிப்பு வெளியிடாததைக் சுட்டிக் காட்டியும் நடைபெற உள்ள உதவியாளர் (ASSISTANT) பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க மூன்று ஆண்டு கால வயது தளர்வு அளித்து, புதுச்சேரி பட்டதாரிகள் பங்கேற்கும் வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் மறைந்த முரசொலி நாளிதழின் ஆசிரியர் முரசொலி செல்வத்தின் திருவுருவப்படத்திற்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர்.



மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் நகரக் கழக அலுவலகத்தில் மாலை அணிவித்து, மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகரச் செயலாளர் இரா.சக்கரை மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், பொதுக் குழு உறுப்பினர் பஞ்சநாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, நகர பொருளாளர் என்.என் இளங்கோ, பேரூர்ச் செயலாளர் நைனா முகம்மது, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாணவர் அணி அமைப்பாளர் பா.வினோத், லெனின் விஜய், தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, ஆதிதிராவிடர் நலக்குழு அணி செல்வ பிரேம், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, வர்த்தக அணி அன்சர் அலி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சி.கே.பிரேம், தொண்டர் அணி செ.அமரஜி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன், துணை அமைப்பாளர் வெற்றி, சங்கர் உள்ளிட்ட நகர அணி நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர் உள்ளிட்ட வார்டு கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

### கலைஞர் செய்திகள் – தலைமை செய்தி ஆசிரியர்

# ப.திருமாவேலன் தாயார் மறைவு!

## மு.அப்பாவு – இரா.ஆவுடையப்பன் – டி.பி.எம். மைதீன்கான் – எம்.எல்.ஏ.க்கள் அஞ்சலி!



சென்னை, அக்.12 - மு.படிக்கராமு அவர்களின் துணைவியாரும், ப.வேல்மணி இணைபேராசிரியை ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி மற்றும் திருமாவேலன் (தலைமை செய்தி ஆசிரியர், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி சென்னை) ஆகியோரின் தாயாருமான ப.முத்துலக்குமி அவர்கள் நேற்று முன்தினம் (10-10-2024), காலை 7:30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (11-10-2024) வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் 31, ராம் நகர், ரோஸ் மேரி பள்ளி அருகில், மகாராஜா நகர், பாளையங்கோட்டை இல்லத்தில் நடைபெற்றது.

இச்செய்தியறிந்ததும் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், அப்துல் வகாப் எம்.எல்.ஏ., அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னணியினர், தமிழறிஞர்கள், அன்னாரின் இல்லம் சென்று மறைந்த ப.முத்துலக்குமி அம்மையார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

# ஜெயங்கொண்டம் தொகுதியில் சாலை அமைத்தல் பணி!

## க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

ஜெயங்கொண்டம், அக். 12 - 3.10.2024 - வியாழக்கிழமை காலை, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, வாணதிரையன்பட்டினம் ஊராட்சியில்,சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024 - 2025 கீழ்,ரூ. 7.48 இலட்சம் மதிப்பீட்டில், வாணதிரையன்பட்டினம் மேட்டுத்தெரு முதல் பெருமாள் கோயில் வரை தார் சாலை அமைத்தல்,

இடையார் ஊராட்சியில்,முதலமைச்சர் கிராமச் சாலை மேம்பாட்டு திட்டம் 2024 - 2025 கீழ், ரூ 22.47 இலட்சம் மதிப்பீட்டில்,இடையார் முதல் உடையார்பாளையம் சாலை வரை தார் சாலை அமைத்தல்,

துளாரங்குறிச்சி ஊராட்சியில்,MGNREGS திட்டம் 2022-2023 ன் கீழ்,ரூ 15.26 இலட்சம் மதிப்பீட்டில்,சூரியமணல் கிராமத்தில்,புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தை திறந்து வைத்தல்,

ஆலத்திப்பள்ளம் ஊராட்சியில்,சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024 - 2025 ன் கீழ்,ரூ 10.00 இலட்சம் மதிப்பீட்டில், ஆலத்திப்பள்ளம் தெற்கு விநாயகர் தெருவில், தார்சாலை அமைத்தல்,

படநிலை ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024 - 2025 ன் கீழ், 7.17 இலட்சம் மதிப்பீட்டில்,படநிலை காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல்,

ஆகிய பணிகளை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் அவர்கள் துவக்கி வைத்தார்.

# அழகிய உருவம் எங்கே? அமைதியின் வடிவம் எங்கே?



கல்லுமே கரையு மே!உன்
கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
முத்தமிழ் அறிஞ ருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
"முரசொலி" உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
நிறைந்தநற் செல்வம்! எங்கள்
"செல்வியின் செல்வ மான
செல்வமே" சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
"முரசொலிப் புதையல்" எங்கே?

தூண்டினார்! குற்றச் சாட்டு
சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்!நீ
குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
" முரசொலி"க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!
குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
சுமைதாங்கி டாத பாரம்!

"கலைஞரின்" மறைவுக் குப்பின்
கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
"தளபதி" அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
துடித்ததே இதயம் யாவும்!
வளைத்ததே மனத்தைத் துன்பம்!
வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்!



**கவிச்சுடர் கவிதைப் பித்தன்**